www.agaram.lk

# தொண்டைமானாறு வெளிக்கள நிலையம் நடாத்தும்
## நான்காம் தவணைப் பரீட்சை - 2021
# Conducted by Field Work Centre, Thondaimanaru.
# 4th Term Examination - 2021

FWC

| | | |
|---|---|---|
| தொடர்பாடலும் ஊடகக்கற்றையும் I<br>Communication and Media Studies I | Two hours<br>Gr -13 (2021) | 29 T I |

**வினாத்தாள் கட்டமைப்பு**

**வினாத்தாள் 1 நேரம் : 02 மணித்தியாலங்கள்**

இவ்வினாத்தாள் A, B, C என்ற மூன்று (03) பகுதிகளைக் கொண்டது.

பகுதி A - (புதிய மற்றும் பழைய பாடத் திட்டங்களுக்கானது)

இந்தப் பகுதி 5 தெரிவுகளைக் கொண்ட 25 பல்தேர்வு வினாக்களைக் கொண்டது. அவை 2008 (பழைய) மற்றும் 2018 (புதிய பாடத்திட்டங்களுக்குப் பொதுவான பாடப் பகுதிகளிலிருந்து தயாரிக்கப்படும் **எல்லா வினாக்களுக்கும் விடையளித்தல் வேண்டும்.** ஒரு வினாவிற்கு 01 புள்ளி வீதம் 25 புள்ளிகள் வழங்கப்படும்.

B, C ஆகிய பகுதிகளுள் **ஒரு பகுதியை மாத்திரம்** தெரிவு செய்து **எல்லா** வினாக்களுக்கும் விடையளித்தல் வேண்டும்.

பகுதி B- (பழைய பாடத் திட்டத்திற்கானது)

இந்தப் பகுதி 2008 **(பழைய)** பாடத்திட்டத்திற்கு ஏற்ப தயாரிக்கப்பட்ட 5 தெரிவுகளைக் கொண்ட 25 பல்தேர்வு வினாக்களைக் கொண்டது. ஒரு வினாவிற்கு 01 புள்ளி வீதம் 25 புள்ளிகள் வழங்கப்படும்.

பகுதி C- (புதிய பாடத் திட்டத்திற்கானது)

இந்தப் பகுதி 2018 **(புதிய)** பாடத்திட்டத்திற்கு ஏற்ப தயாரிக்கப்பட்ட 5 தெரிவுகளைக் கொண்ட 25 பல்தேர்வு வினாக்களைக் கொண்டது. ஒரு வினாவிற்கு 01 புள்ளி வீதம் 25 புள்ளிகள் வழங்கப்படும்.

வினாத்தாள் I இற்கான மொத்தப் புள்ளிகள்

| | | |
|---|---|---|
| பகுதி A- | 1 x 25 = | 25 புள்ளிகள் |
| பகுதி B/C- | 1 x 25 = | 25புள்ளிகள் |
| மொத்தப் புள்ளிகள் | | 50 புள்ளிகள் |

Agaram.LK - Keep your dreams alive!
Agaram.LK - Keep your dreams alive!



agaram.lk

Agaram.LK - Keep your dreams alive!

## பகுதி – I

1) தொடர்பாடலின் இயல்புகளில் தலையாயது
   1. ஒரு வழியானது   2. இரு வழியானது   3. சக்திமிக்கது
   4. செயன்முறையானது   5. பல்திசைகளிலானது

2) கருத்து ஆற்றல் என்பவற்றை பேச்சு அல்லது குறியீட்டின் மூலம் முன்வைப்பது தொடர்பாடலாகும் என குறிப்பிடுவது / குறிப்பிடுவர்?
   1. யுனஸ்கோ   2. குளோட் ஷனோன் மற்றும் வீவர்   3. வில்பர் ஷ்ராம்
   4. சாள்ஸ் கூலி   5. ஒக்ஸ்போட் அகராதி

3) ஹரோல். டி. லாஸ்வெல்லின் மாதிரியில் உள்ளடங்காதது.
   1. தகவல்   2. தொடர்பியலாளன்   3. பெறுநர்   4. கடத்தி   5. விளைவு

4) எழுத்தாளர் ஒருவர் வீதியால் பயணிக்கும் போது திடிரென குறுக்கால் சென்றவரை கண்டவுடன் திடிரென பயணத்தினை நிறுத்தினார். இது மிகப்பொருத்தமாக அமைவது.
   1. கட்புலத் தொடர்பாடல்   2. செவிப்புலத் தொடர்பாடல்   3. ஆளிடைத்தொடர்பாடல்
   4. ஆளுள் தொடர்பாடல்   5. முறைசாராத் தொடர்பாடல்

5) வானொலி ஊடகத்தின் மொழியின் பயன்பாடானது.
   1. பாரம்பரியமாயிருத்தல் அவசியம்
   2. சிக்கல் தன்மையானதாக இருத்தல் அவசியம்
   3. எளிமையானதாக இருத்தல் அவசியம்.
   4. கற்பனைத்தன்மையற்றதாக இருத்தல் அவசியம்
   5. நவீனமாயிருத்தல் அவசியம்

6) குறியீடுகளைப் பயன்படுத்தி அவற்றைத் தகவலாக பரிமாற்றும் செயன்முறை எவ்வாறு இனங்காணப்படும்.
   1. பின்னூட்டம்   2. குறிமுறையவிழ்ப்பு   3. குறிமுறையாக்கம்
   4. குறியாக்கம்   5. தகவல் பெறுகை

agaram.lk

7) நாட்டார் பாடல் பற்றிய கூற்றுக்களில் பொருத்தமில்லாதது.
   1. வாய்மொழியாக பரவுதலடையும் வடிவம்
   2. பேச்சுத்தொடர்பால் வடிவமாக கொள்ளமுடியும்.
   3. தொழில்சார் வாழ்க்கையை வெளிப்படுத்தவல்லது.
   4. படைப்பாளியை இனங்காணக்கூடிய வடிவம்
   5. சந்தம், ஓசை முக்கியமான கலைவடிவம்

8) செய்திப்பத்திரிகை ஒன்றில் வெளியான செய்தி குறித்த ஒரு தனிநபரை தனிப்பட்ட ரீதியாக பாதிப்பதாக அவர் உணரந்தார். இதனால் குறித்த ஊடக நிறுவனத்திற்கு தொலைபேசி அழைப்பை மேற்கொண்டு அது பற்றி வினாவினார் இச்செயற்பாட்டை புலப்படுத்தும் விடயம்.
   1. குறிமுறையவிழ்ப்பதாகும்.   2. புலக்காட்சிப்படுத்தல் ஆகும்.   3. பின்னூட்டலாகும்
   4. தாக்கம் ஆகும்   5. வாயிற்காப்பு ஆகும்.

9) கடற்கரையோரக்கிராமம் ஒன்றில் மக்களுக்கு கடல் அனர்த்தம் பற்றிய அறிவிப்பினை மிகவும் துரிதமாகவும் பரவலாகவும் வழங்கப்படக்கூடியது.
   1. எழுத்துமூலத் தொடர்பாடல் மூலமாகும்.
   2. கட்புலத் தொடர்பாடல் மூலமாகும்.
   3. செவிப்புலத் தொடர்பாடல் மூலமாகும்.
   4. செவிப்புல – கட்புலத் தொடர்பாடல் மூலமாகும்.
   5. எழுத்துமூல – கட்புலத்தொடர்பாடல் மூலமாகும்.

Agaram.LK - Keep your dreams alive!

10) ஆசிரியர் ஒருவர் தனது வகுப்பு மாணவர்களின் மிகையொலியை குறைப்பதற்கு மேசைமீது கையினால் தட்டி உரத்த தொனியால் குரலை வெளிப்படுத்தினார். இச்சூழலை அடையாளப்படுத்தும் தொடர்பாடல் வடிவம்,

1. வாய்மொழித்தொடர்பாடல்
2. பேச்சுத்தொடர்பாடல்
3. வாய்மொழி சாராத் தொடர்பாடல்
4. அளிக்கைத் தொடர்பாடல்
5. முறைசாராத் தொடர்பாடல்.

11) முன்பள்ளியில் கற்ற மாணவன் ஒருவன் தனது முதலாம் தரத்திற்கு நகரில் உள்ள பிரபலமான பாடசாலையொன்றில் புதிதாக இணைந்து கொண்டான். குறித்த சூழலை புதிய அனுபவமாக கருதினான். இதனால் அப்பாடசாலைக்கு ஏற்ப குறித்த மாணவன் தொடர்புபடுவதற்கு அவசியமான விடயம்.

1. தகவல் வழங்கல்
2. இடைத்தொடர்பு
3. இணைப்பாக்கம்
4. சமூகமயமாக்கம்
5. கல்வி வழங்குதல்.

12) நோக்கம், குறிக்கோள், பொறுப்புக்கூறல், நல்லிணக்கம் முதலான கருத்துக்களோடு ஒப்பிட்டு நோக்குமிடத்து மிகவும் பொறுப்புடன் கூடிய தொடர்பாடல் வகை எது?

1. குழுத்தொடர்பாடல்
2. ஆளுள் தொடர்பாடல்
3. ஆட்களிடைத் தொடர்பாடல்
4. வெகுசனத்தொடர்பாடல்
5. பொதுசனத்தொடர்பாடல்

13) தொடர்பாடல் எனும் எண்ணக்கருவின் அடிப்படை அர்த்தமாவது

1. தகவல் பரிமாற்றம்
2. செய்திகளை எடுத்துச்செல்லல்
3. தனிப்பட்ட இடைத்தொடர்பு
4. ஒரு விடயத்தை இன்னுமொருவருக்கு அறியப்படுத்துதல்.
5. தனித்திருக்கும் பகுதியினர் மத்தியில் தொடர்பினை ஏற்படுத்தல்.

14) ஊடக நிறுவனம் ஒன்று தனது செய்திவழங்கலிலும், பௌதீகவளம், மனிதவளம், இயந்திரவளம் போன்றவற்றினடிப்படையிலும் விரிவுபடுதல் அழைத்துக்கொள்ளப்படுவது.

1. ஊடகத் திரிபு
2. ஊடக விஸ்தீரணம்
3. ஊடக விளங்கறிவு
4. ஊடக வளர்ச்சி
5. புதிய ஊடகம்.

15) ஊடக விளங்கறிவினூடாக அடிப்படையில் விருத்தி செய்ய முயற்சிக்கப்படுவது யாது?

1. செய்தி விமர்சனத்திறன்
2. செய்தி உருவாக்கும் திறன்
3. செய்திகளை மதிப்பிடும் திறன்
4. செய்திகளை உள்வாங்கும் திறன்.
5. செய்திகளை பொருட்கோடல் செய்யும் திறன்.

16) போர் தொடர்பான செய்திகளை அறிக்கையிடுவதற்காக உலகப்போர்க்காலங்களில் பயன்படுத்தப்பட்ட ஊடகங்களை முதன்முதலில் மனிதர்க்குரிய ஊடகங்களாக பிரகடனப்படுத்தியவர்.

1. வில்பர் ஷ்ராம்
2. ஜோன் ரீத்
3. ஹரோல். டி. லாஸ்வெல்
4. ஜோர்ஜ் கெப்னர்.
5. காள். ஐவர் ஹோவ்லண்ட்



Agaram.LK - Keep your dreams alive!
Agaram.LK - Keep your dreams alive!
agaram.lk

17) ஊடக விளங்கறிவு தொடர்பான வகுப்பறைக் கலந்துரையாடலொன்றில் பின்வரும் சிந்தனைகள் முகிழ்ந்தெழுந்தன.

லிதுர்ஷி – மொழியை எழுதுவதற்கும் வாசித்தலுக்குமான ஆற்றல் ஊடக விளங்கறிவு எனப்படும்.

சங்கீர்த்தன் – ஊடகங்களினை பகுப்பாய்வு செய்வதற்கான ஆற்றல் ஊடக விளங்கறிவு எனலாம்.

சஜீத் – ஊடகங்கள் வெளியிடும் தகவல்களை மதிநுட்பத்துடன் விளங்கிக் கொள்ளும் ஆற்றல் ஊடகவிளங்கறிவு எனலாம்.

தர்சிகா – அச்சு ஊடகங்களில் உள்ள விடயங்களினை மாத்திரம் ஆய்வு செய்தல் ஊடக விளங்கறிவு ஆகும்.

இவற்றுள் சரியான கூற்றுக்களினை வெளியிட்டவர்கள்.

1. லிதுர்ஷி, சங்கீர்த்தன், சஜீத்
2. லிதுர்ஷி, சங்கீர்த்தன், தர்சிகா
3. சங்கீர்த்தன், சஜீத்
4. லிதுர்ஷி, தர்சிகா
5. சஜீத், தர்சிகா

18) பின்வருவனவற்றிலிருந்து சரியான கூற்றைத் தெரிவு செய்க.

1. பொதுமக்களின் சடங்குகள மற்றும் நம்பிக்கைகள் தெய்வங்கள் பிசாசுகள் மற்றும் பேய்களுடன் தொடர்பற்றவை.
2. நாட்டார் சடங்குகளும் நம்பிக்கைகளும் சமூக யதார்த்தத்தைக் கொண்டிருப்பதில்லை.
3. நாட்டார் சமயமும் சடங்குகளும் நாட்டார் நம்பிக்கைகளிலிருந்து விலகியிருப்பவையல்ல.
4. நாட்டார் சடங்குகளும் நம்பிக்கைகளும் கீழைத்தேய நாடுகளில் அரிதானவை.
5. சடங்குகளும் நம்பிக்கைகளும் மக்களின் நடத்தைகளைப் பாதிப்பதில்லை.

19) வேறுபிரித்தல் அல்லது பிரிவு அவசியமான ஆளுள் தனிநபர் தொடர்பாடல் செயற்பாடாகக் கருத்திற் கொள்ளக்கூடியதாக இருப்பது.

1. ஐம்புலன் உணர்வுகளுக்கும் அவதானத்தைச் செலுத்துவதாலாகும்.
2. ஆழ்பரிவைப் பெற்றுக்கொள்வதாலாகும்.
3. ஐம்புலனுணர்வுகளையும் தனித்தனியாக இனங்காண்பதற்காகும்.
4. வினைத்திறன் மிக்க புலக்காட்சிக்காகவாகும்.
5. எண்ணக்கருக்களை விசேடமான முறையில் கட்டியெழுப்புவதற்காகவாகும்.

20) ஊடகங்கள் வழியாக வன்முறைகள் நிறைந்த நிகழ்ச்சிகள் முன்வைக்கப்படுவதனால் ஏற்படும் சமூகத்தாக்கங்கள் பற்றி ஊடகக்கழக மாணவர்கள் மத்தியில் கலந்துரையாடல் ஒன்று நடைபெற்றது.

டினோசன் - அவ்வாறான நிகழ்ச்சிகளைப் பார்ப்பது சிலருக்கு விருப்பம்.

பிரசாத் - மாணவர்கள் வாழ்க்கையில் தீவிரமாகச் செல்வாக்குச் செலுத்தலாம்.

ராஜ்குமார் - சில நேரங்களில் வன்முறை குறைவடையலாம்.

சுகேதன் - குடும்பங்கள் மத்தியில் விரும்பத்தகாத பிரச்சினைகள் உருவாகலாம்.

இச்சிந்தனைகளில் ஏற்றுக்கொள்ளத்தக்க சிந்தனைகளினை முன்வைத்தோர்.

1. டினோசன், பிரசாத், ராஜ்குமார்
2. பிரசாத், ராஜ்குமார், சுகேதன்
3. டினோசன், ராஜ்குமார், சுகேதன்
4. டினோசன், பிரசாத், சுகேதன்
5. டினோசன், பிரசாத், ராஜ்குமார், சுகேதன் ஆகிய அனைவரும்.



Agaram.LK - Keep your dreams alive!
Agaram.LK - Keep your dreams alive!
agaram.lk

Agaram.LK - Keep your dreams alive!

21) ஊடகங்கள் வெளிப்படுத்தும் இயல்புகளின் அடிப்படையில் நான்கு கூற்றுக்கள் கீழே தரப்பட்டுள்ளன.

A. பேசுதல் கேட்டல் சமநேரத்தில் இடம்பெறும்.

B. விவரணமாக விடயங்களை முன்வைக்ககூடியது.

C. பலகலைகளினை ஒன்றினைக்கும் தன்மை உள்ளது.

D. கட்புல செவிப்புல வடிவங்களின் ஒன்றிணைவு ஆகும்.

மேற்படி கூற்றுக்கள் குறித்து நிற்கும் வழிமுறைகளின் தொடரொழுங்கு யாது?

1. திரைப்படம், வானொலி, தொலைக்காட்சி, செய்திப்பத்திரிகை
2. வானொலி, செய்திப்பத்திரிகை, திரைப்படம், நாடகம்
3. செய்திப்பத்திரிகை, திரைப்படம், தொலைக்காட்சி, வானொலி
4. தொலைக்காட்சி, வானொலி, செய்திப்பத்திரிகை, மேடைநாடகம்
5. வானொலி, செய்திப்பத்திரிகை, மேடைநாடகம், தொலைக்காட்சி

22) கம்பரெலியக திரைப்படத்தில் ஜினதாச நந்தாவைத் திருமணம் செய்யும் காட்சியை படம் பிடிக்க பயன்படுத்திய கமராகோணம் எது?

1. பதிகோணம் (Low Angle)
2. நீள் எடுப்பு (Long shot)
3. உயர் கோணம் (High Angle)
4. இடைநிலைஎடுப்பு (Medium shot)
5. நெடுந்தொலை எடுப்பு (very Long shot)

23) உலகின் முதலாவது பொதுமக்கள் தொடர்பு அலுவலகத்தினை ஆரம்பித்துக் கொண்டவர்.

1. எட்வட். எல். பெர்னிஸ்
2. ஜேம்ஸ் குருனிக்
3. ஐவி. லீ
4. ரொட் ஹான்ட்ஸ்
5. பிலிப். ஜே. கிச்சன்.

24) ஊடக விளம்பரப்படுத்தல் பற்றிய விவாதமொன்றில் எடுத்துரைக்கப்பட்ட விடயங்களுக்கு ஏற்ப அது.

A. ஒரு சமூகத் தேவையாகும்.

B. சமூகத்திற்கு நல்ல விடயமொன்றை வழங்கும்.

C. சமூகத்திற்கு தீங்கான விடயமொன்றை வழங்கும்

D. சமூக அபிப்பிராயங்களினை மாற்றும்

மேற்குறித்த கூற்றுக்களில்

1. A, B, C ஆகியன மாத்திரம் சரியானவை
2. A, B, D ஆகியன மாத்திரம் சரியானவை.
3. A, C, D ஆகியன மாத்திரம் சரியானவை.
4. B, C, D ஆகியன மாத்திரம் சரியானவை.
5. A, B, C, D ஆகிய அனைத்தும் சரியானவை.

25) ஊடக தின விழாவில் சிறப்புப் பேச்சாளனாக இணைந்து கொண்ட சாள்ஸ் எனும் மாணவன் தற்கால இளைஞர்கள் சிறுவர்கள். தமது உடை பாவனை, தலையலங்காரம், உணவுப்பழக்கவழக்கம் ஆகியவற்றில் பாரம்பரியமான விடயங்களினை விடுத்து பிரபலங்களை பின்பற்றிக் கொள்கின்றனர். இது சமுதாயத்திற்கு ஏற்புடையது அல்ல என கருத்து தெரிவித்தான். இத்தகைய சூழலை அடையாளப்படுத்துவது?

1. பாரம்பரியப் பண்பாடு
2. பூகோளப் பண்பாடு
3. செல்வியற்பண்பாடு
4. பிரசித்தப்பண்பாடு
5. வெகுசனப் பணப்பாடு



agaram.lk

## பகுதி B

❖ **பழைய பாடத்திட்டத்திற்குரியது.**

26. கீழே தரப்பட்ட பதங்கள் வழியாக வெளிப்படுத்தப்படும் மொழி வகைகளைப் பிரதிநிதித்துவப்படுத்தும் ஒழுங்கை குறிப்பிடுவது

A- நிறுத்தற்குறிகள், மொழிநடை, பொருத்தமான மரபுகள்

B – தனிப்பட்ட பார்வை நோக்கின் தேவை, கருத்தியல்

C- சந்தம், வேகம் மற்றும் மொழிநடையின் விசேடத்துவங்கள்

1) எழுதுதல், நடித்தல், பேசுதல்
2) பேசுதல், மீளாய்வு செய்தல், எழுதுதல்.
3) எழுதுதல், மீளாய்வு செய்தல், பேசுதல்.
4) நடித்தல், பேசுதல், எழுதுதல்.
5) மீளாய்வு செய்தல், எழுதுதல், நடித்தல்.

27. மக்கள் தமது தேவைகளினைப் பூர்த்தி செய்ய முடியாதவிடத்து முரண்பாடுகள் தோன்றுகின்றன. மாஸ்லோ குறிப்பிடும் தேவைமட்டத்தில் ஆரம்ப நிலைத் தேவையுடன் தொடர்புடையது?

1) நடைமுறைத் தேவைகள்
2) சமூகம் வரவேற்கும் தேவை
3)சுயதேவை
4) உடலியற் தேவை
5) பாதுகாப்புத் தேவை.

28. பின்வரும் அபிவிருத்தி தொடர்பாடல் பாவனைகளில் மகாத்மா காந்தியடிகளினால் பயன்படுத்தப்பட்ட அபிவிருத்தி தொடர்பாடல் அம்சங்களுடன் பொருந்தாத அம்சத்தைக் குறிப்பது

1) உப்புச் சத்தியாக்கிரகம், சுயராஜ்ஜியம்
2) அறியும் ஆற்றல், சாராம்சப்படுத்தல்.
3) சராம்சப்படுத்துதல், கைராட்டினம்
4) சுயராஜ்ஜியம், தொகுப்பாக்குதல்.
5) உப்புச் சத்தியாக்கிரகம், அறியும் ஆற்றல்

29. சர்வதேச ரீதியில் கலாசார வளர்ச்சிக்கு உரிய பங்களிப்பை வழங்கி விஞ்ஞானத் தளத்தில் இருந்து திட்டங்களினை நடைமுறைப்படுத்தும் நிறுவனமாக அமைவது

1) சர்வதேச மன்னிப்புச் சபை
2) சர்வதேச நாணய நிதியம்
3) உலக வங்கி
4) உலக சுகாதார நிறுவனம்
5) யுனஸ்கோ

30. சுயஎண்ணக்கரு பற்றிய சில கூற்றுக்கள் கீழே தரப்பட்டுள்ளன.

A- ஒரு நபரின் பிறப்புடனேயே உருவாகின்றது.

B- மற்றர்களுடன் கலந்துரையாடலின் விளைவாக உருவாகின்றது.

C- தொடர்பாடல் செயன்முறையின் வாயிலாக வளர்ச்சியடைகின்றது.

மேற்குறித்த கூற்றுக்களில் சரியானது / சரியானவை

1) A மாத்திரம்
2) B மாத்திரம்
3) C மாத்திரம்
4) A, C மாத்திரம்
5) B, C ஆகியன மாத்திரம்

31. வெகுசன ஊடகங்களில் சமூகப் பொறுப்புணர்வுக் கோட்பாடு பற்றிய கருத்துக்கள் கீழே தரப்படுகின்றன.

மதுஷி - ஊடகச் செயன்முறையில் அரசின் தலையீட்டை இழிவளவாக்குகின்றது.

விதுஷி - பல்வேறு பிரதிநிதித்துவங்களிற்கான வெளியை வழங்குகின்றது.

கௌசி - தேவைப்படும் போது அரசின் விதிமுறைகளினை எதிர்பார்க்கின்றது.

கதீஷி - இலாபமீட்டும் குறிக்கோள் மற்றும் போட்டித்தன்மையை இழிவளவாக்குகிறது.

மேற்குறித்த கூற்றுக்களில் மிகச் சரியான கூற்றுக்களை முன்வைத்தோர்.

1) மதுஷி மற்றும் விதுஷி
2) மதுஷி மற்றும் கௌசி
3) மதுஷி விதுஷி மற்றும் கௌசி
4) விதுஷி, கௌசி, கதீஷி
5) மதுஷி, விதுஷி, கௌசி, கதீஷி

Agaram.LK - Keep your dreams alive!
Agaram.LK - Keep your dreams alive!
agaram.lk



agaram.lk

Agaram.LK - Keep your dreams alive!

Agaram.LK - Keep your dreams alive!

32. மாற்றூடகம் தொடர்பான கூற்றுக்களில் பொருத்தமில்லாதது
    1) ஆதாய நோக்கினை அடிப்படையாக கொண்டது.
    2) சிறிய குழுக்களிடையே தகவல் பரிமாறும் தன்மை கொண்டது.
    3) பிரதான ஊடக நீரோட்டத்திற்கு வெளியாக தொழிற்படும்.
    4) சமுதாய நலன் கருதி தொழிற்படும்.
    5) பரந்த சமுதாயத்திற்கு தகவல் கடத்தப்பட முடியாதது

33. அபிவிருத்தி திட்டங்களினை தயார்ப்படுத்துவதில் கவனம் செலுத்தப்பட வேண்டிய ஐந்து குறிப்புக்கள் கீழே தரப்பட்டுள்ளன.
    A- திட்டத்தின் கால அளவு
    B - திட்டத்தின் மதிப்பீடு
    C - திட்டப்பகுதியின் புவிசார் காரணிகள்
    D- திட்டம் இலக்கு வைக்கப்படும்சமூகம்
    E – திட்டம் தொடர்பான வரவு செலவு
    மேற்குறித்த குறிப்புக்களின் முக்கியத்துவத்தைக் குறிப்பிடும் வரிசைக்கிரமமாக அமைவது
    1) A, B, C, D, E     2) A, D, C, E, B     3) B, A, C, D, E,
    4) C, D, B, E, A     5) D, C, E,A, B

34. "கொரோனா இடர்காலத்தில் சமூக ஊடகத்தைப் பயன்படுத்துதல் என்னும் தலைப்பில் தொடர்பாடல் அய்வு அறிக்கை ஒன்றினை தயாரிக்குமாறு தங்களிற்குப் பொறுப்பு வழங்கப்பட்டுள்ளது. இவ் அறிக்கையில் உள்ளடக்கத் தேவையற்றது எது?
    1) ஆராய்ச்சி முறையின் பயன்பாடு     2) பயன்படுத்திய மாதிரி எடுத்தல் முறை
    3) ஆலோசனைகளும் முடிவுகளும்     4) தகவல் அபிவிருத்தித் திட்டங்களின் பாகுபாடு
    5) பயன்படுத்திய பௌதீக மனித வளங்கள்

agaram.lk

35. உளப்பகுப்பாய்வு கோட்பாட்டினை முன்வைத்து உள்ளத்தின் பிரிவுகள் தொடர்பில் ஆராய்ந்த முக்கியமான அறிஞர்
    1) ஜோவரான் கல்துங்     2) சாள்ஸ் கூலி     3)கலாநிதி பியசோம மேதிஸ்
    4) தோமஸ் கூன்     5) சிக்மன் பிராய்ட்

36. இலங்கையில் பதினாறாம் நூற்றாண்டிலிருந்து இருபதாம் நூற்றாண்டின் முற்பகுதிவரை அந்நியர் ஆட்சி நிலவியது. இச்செயற்பாடு பண்பாட்டியல் அம்சங்களில்
    1) பண்பாட்டு பரிமாற்றம் ஆகும்.     2) பண்பாட்ட அதிர்வு ஆகும்.
    3) பண்பாட்டு தேக்கம் ஆகும்.     4) பண்பாட்டு விரிவு ஆகும்.
    5) பண்பாட்டு ஆக்கிரமிப்பு ஆகும்.

37. அமல் தனது பணியிலிருந்து ஓய்வு பெற்றதால் தனது நாளாந்த வாழ்வுப் போக்கிலிருந்து விலகிச் செல்ல நேர்ந்தது. இதனால் பல உளமாற்றங்களினை எதிர்கொண்டார் இச்செயற்பாடு புலப்படுத்துவது
    1) பதகளிப்பின் (Tension) குறியீடு     2) மன அழுத்தத்தின் (Stress) குறியீடு
    3) மனக் கவலையின் (anxiety) குறியீடு     4) மனச் சோர்வின் (depression) குறியீடு
    5) துருவமயமாதலின் (Polarization) குறியீடு



agaram.lk

38. அபிவிருத்தியில் பொதுமக்கள் தொடர்பிலான நான்கு அம்சங்களை சீனக்குடியரசின் முன்னாள் தலைவரான மாவோ சேதுங் அறிமுகப்படுத்தினார் சரியாக அந்த அம்சங்களினை கொண்டிருக்கும் தெரிவை தெரிவு செய்க.
 1) அறியும் ஆற்றல், சமூகத்தின் பங்களிப்பு, நகரமயமாக்கம், எண்ணளவாக்கம்
 2) தொகுப்பாக்கம், தொழிற்துறையாக்கம், நம்பகத்தன்மை, நடைமுறையாக்கம்.
 3) எண்ணளவாக்கம், நகரமயமாக்கம், தொழிற்துறையாக்கம், நவீனமயமாக்கம்.
 4) அறியும் ஆற்றல், தொகுப்பாக்கம், எண்ணளவாக்கம், நடைமுறையாக்கம்.
 5) தொழிற்துறையாக்கம், நகரமயமாக்கம், நவீனமயமாக்கம், மேற்கத்தைய மயமாக்கம்.

39. ஊடகங்கள் தனியார் மையமாக தொழிற்படினும் அதனை அரசு தனது கட்டுப்பாட்டில் வைத்திருக்கும் எனும் கருத்தியலோடு நேரடியாக தொடர்புபடும் எண்ணக்கரு
 1) ஆட்சி அதிகாரவாத எண்ணக்கரு 2) சுதந்திரவாத எண்ணக்கரு
 3) சமூகப் பெறுப்புடமை எண்ணக்கரு 4) தாராண்மை வாத எண்ணக்கரு
 5) சோவியத் கம்யூனிஸ் எண்ணக்கரு

40. வீட்டின் உள்ளக கலாசார செயலொழுங்கில் அதிகளவு தாக்கத்தினை செலுத்தும் அதேவேளை இலங்கையில் ஜனரஞ்சகப் பண்பாட்டியலை பரவலடையச் செய்யக்கூடிய ஊடக வழிமுறை
 1) பத்திரிகை 2) வானொலி 3) தொலைக்காட்சி
 4) இணையம் 5) செல்லிடத் தொலைபேசி

41. தனிநபர் தேவைகளினை நிறைவு செய்தல் தனிநபர் அங்கம் வகிக்கும் சமூகத்தினால் அங்கீகரிக்கப்பட்ட நடத்தைக் கோலங்கள் ஆகியன தொடர்புபடும் பணி
 1) சுய எண்ணக்கரு 2) ஆழ்பரிவு 3) தன்வயப்படுத்தல்.
 4) ஒத்துணர்வு 5) சமூகமயமாக்கல்

42. பிரதான ஒலிபரப்பு சேவைக்குப் புறம்பாக பிரதேச ஒலிபரப்பு சேவைகளும் ஆரம்பிக்கப் பட்டன. கீழ்வருவனவற்றில் முதலாவது பிரதேச வானொலிச் சேவையாக அறிமுகப்படுத்தப் பட்ட சேவை
 1) ரஜரட்ட சேவை 2) ருஹுபுனு சேவை 3) கிராந்துரு கோட்டை
 4) கண்டி சேவை 5) மகாவலி சேவை

43. மொழிப் பண்பாட்டில் உள்ளடங்காதது
 1) கொண்டாட்ட நிகழ்வுகளுடன் தொடர்புடைய செயற்பாடு
 2) மெய்யியல் அடிப்படையிலான படைப்புகளும் ஒப்பித்தல்களும் உருவாகுதல்.
 3) மனிதனுடன் தொடர்புடைய வெளிவாரியான இயற்கைப் பொருட்கள்
 4) மனிதனின் சமூகப் பழக்கவழக்கங்களுடன் தொடர்புடைய செயற்பாடுகள்
 5) தனக்குத் தானே பேசிக்கொள்வதுடன் தொடர்புடைய தொடர்பாடல் செயற்பாடுகள்.

44. வெகுசன ஊடகங்களினால் முன்வைக்கப்படும் செய்திகள் கருத்துருவாக்கத் தலைவர்களினால் மத்தியஸ்தப்படுத்தப்படுவது பற்றிய சிந்தனை
 1) வாயிற் காப்பாளர் எண்ணக்கரு 2) இருபடிநிலை எண்ணக்கரு
 3) சமூகப் பொறுப்புடமை கோட்பாடு 4) கல்துங்கின் முரண்பங்கு கோட்பாடு
 5) மாஸ்லோவின் தேவைக் கோட்பாடு



Agaram.LK - Keep your dreams alive!
Agaram.LK - Keep your dreams alive!
agaram.lk

45. அபிவிருத்தி தொடர்பாடல் செயற்றிட்ட அறிக்கையானது எதிர்காலத் திட்டங்களிற்கு முக்கியமானது. ஏனெனில்
    1) இலக்குகள் மற்றும் குறிக்கோள் விபரங்களை உள்ளடக்கியிருத்தல்.
    2) அனுசரணை வழங்குபவரின் விபரங்களைக் குறிப்பிட்டு இருத்தல்.
    3) தோன்றிய பிரச்சினைகள் குறைபாடுகளை உள்ளடக்கியிருத்தல்.
    4) செயற்றிட்டக் குழு பற்றிய விபரத்தை வழங்குதல்.
    5) வேறுபட்ட பார்வைகளுக்கு சந்தர்ப்பமளிக்காதிருத்தல்.

46. குறித்தவொரு நாட்டில் சட்டத்தையும் சமாதானத்தினையும் நிலைநிறுத்தும் முகமாக சமூக ஊடகங்கள் தணிக்கை செய்யப்படுவது அந்த ஊடகங்களில் செய்தியானது
    1) பெறுநர்கள் மத்தியில் வேமாகப் பரவலடைவதன் காரணத்தினால்
    2) உயரிய நம்பிக்கையை பெற்றிருத்தல்.
    3) பகுப்பாய்வுடனான தகவ்கள் முன்வைக்கப்படுவதன் காரணத்தினால்.
    4) படங்கள் மற்றும் ஒலி ஆகிய சேர்க்கைகள் குறைவாக பயன்படுத்துவதன் காரணத்தினால்.
    5) தகவல்களை அதிகாரம்மிக்க மூலங்களின் அடிப்படையில் மாத்திரம் முன்வைக்கப்படுவதனால் ஆகும்.

47. தற்போது நடைமுறையில் இருக்கும் தகவல்களைப் பெற்றுக் கொள்வதற்கான உரிமைச்சட்டம் பயன்படுத்தக் கூடியதாக இருப்பது
    1) ஊடகவியலாளர் மாத்திரம் தகவல்களைப் பெற்றுக் கொள்ளுதல்.
    2) அரச மற்றும் தனியார் துறைகளில் இருந்து தகவல்களைப் பெற்றுக் கொள்ளுதல்.
    3) அரச துறையில் இருந்து எந்தத் தகலையும் உடனடியாகப் பெற்றுக் கொள்ளுதல்.
    4) பத்து வருடங்களுக்கு முன்னர் பரிமாறப்பட்ட அரசு தொடர்புடைய ஆவணங்களை பரிசீலித்தலிற்காகும்.
    5) அரசினதும் அது தொடர்புடைய நிறுவனங்களினதும் செயற்பாடுகள் பற்றிய தகவல்களினைப் பெற்றுக் கொள்வதற்காகும்.

48. கொந்நிலை, நடத்தைக்கோலம் ஆகியன ஒன்றிணைவதால் உருவாகும் மொழியின் இயல்புகளினைக் குறிப்பது
    1) பேச்சு 2) உரை 3) விபரணம்
    4) பிரதியாக்கம் 5) ஆற்றுகை

49. ஒரு பாடசாலையில் ஊடக கழகம் பாடசாலையை அழகுபடுத்துதல் வேலைத்திட்டம் ஒன்றினை ஆரம்பித்தது. அதன் செயலடைவை செயற்றிட்ட முகாமைத்துவ ஒழுங்கமைப்பின் ஆவணமொன்றின் ஊடக கண்காணிப்பதற்கும் தீர்மானிக்கப்பட்டது. செயற்றிட்ட முகாமைத்துவ ஒழுங்கமைப்பு ஆவணத்தில் உள்ளடக்கப்படவேண்டிய முக்கிய விடயங்களினைக் குறிப்பது.
    1) இலக்குகள், வரவு – செலவுத்திட்டம். நிறுவனக் கட்டமைப்பு, வரையறைகள்.
    2) தொடர்புடைய செயற்பாடுகள், காலச்சட்டகம், நியதிகள், பொறுப்புக்கள்.
    3) நிதி வளங்கள், பௌதிக வளங்கள், மனித வளங்கள், மதிப்பீட்டுச் செயன்முறைகள்.
    4) வரவுசெலவுத்திட்டம், உத்திகள், பணிவிதி முறைகள், எதிர்பார்க்கப்படும் பெறுபேறுகள்
    5) இலக்குகள், உத்திகள், வளங்கள், காலச்சட்டகம் முதலியன.

Agaram.LK - Keep your dreams alive!
Agaram.LK - Keep your dreams alive!
agaram.lk

50. அபிவிருத்தித் தொடர்பாடல் வழிமுறைகள் பற்றித் தீர்மானிக்கையில் கவனத்தில் கொள்வதற்காகப் பிரேரிக்கப்பட்டுள்ள சில கருத்துக்கள் கீழே தரப்பட்டுள்ளன.

A – அவை புதிய தொழினுட்ப அபிவிருத்தியுடன் இணைத்து நடைமுறைப்படுத்தக் கூடியன

B - உரிய விடயம் தொடர்பில் நிபுணத்துவம் கொண்டோரினால் திட்டங்கள் தயாரிக்கப்படுவது அவசியமாகும்.

C - அவற்றைப் பாரம்பரிய வழிமுறைகளுடன் இணைத்து பிரயோகிப்பது தொடர்பிலான ஆற்றல்களினைக் கண்டறிவது சிறப்பானது

D - அவை இலக்கு வைக்கப்பட்ட சமூகத்திற்கு மாத்திரமான திட்டமிடப்பட்ட தொடர்பாடல் வழிமுறைகளாக அமைவது அவசியமானது.

E - பயன்தரக் கூடியவாறு மொழியைப் பயன்படுத்தும் ஆற்றலை ஆய்ந்தறிந்து தெரிவு செய்வது கட்டாயமானது.

இவற்றுள் உண்மையான கூற்றுக்கள்

1) A, B, C, D ஆகியன மாத்திரம்
2) A, B, D, E ஆகியன மாத்திரம்
3) A, C, D, E ஆகியன மாத்திரம்
4) A, C, D, E ஆகியன மாத்திரம்
5) A, B, C, D, E ஆகியன மாத்திரம்

## பகுதி C

❖ **புதிய பாடத்திட்டத்திற்குரியது.**

26) தொடர்பாடல் கற்கை அறிமுகம் தொடர்பில் ஆரம்பத்தில் கவனம் செலுத்திய வேறுதுறைசார் அறிஞர்களின் தொகுதி

1. ஜோன் மில்ரன், வோல்ற்றர் லிப்மன், சாள்ஸ் கூலி
2. கேர்ட். லெவின், சாள்ஸ் கூலி, ஜோன்டுவி
3. வோல்ற்றர் லிப்மன், சாள்ஸ் கூலி, ஜோன்டுவி
4. ஹரோல். டி. லாஸ்வெல், ஜோன்டுவி, ஸ்ரூவேர்ட் மில்
5. தோமஸ். ஜெபர்ஸன், அரிஸ்ரோட்டில், சாம்பிளக்

27) பொதுமக்கள் தொடர்பு என்பது நல்லெண்ணத்துடன் பாய்ந்து வரும் கருத்துப் பிரவாகமாகும் எனும் கருத்தியலை முன்வைப்பர்?

1. சாம் பிளக்
2. சார்ள்ஸ் பிளேகார்ட்
3. எல். பெர்ணிஸ்
4. வில்பர் ஷ்ராம்
5. ஜோன் டுவி.

28) நிறுவனம் சார் பொதுமக்கள் தொடர்பினைப் பேணும் போது அவசியம் கவனம் செலுத்த இயலாத விடயம்.

1. நிறுவனத்தின் நற்பெயர்.
2. நிறுவனத்திற்கும் தொடர்பினை ஏற்படுத்தும் தரப்பினருக்குமான நுழைவாயில்.
3. பல்வேறு கருத்துருவாக்க நபர்கள்.
4. தகவலை பரப்பும் ஊடக வழிமுறைகள்
5. விளம்பரப்படுத்தும் உத்திகள்.



Agaram.LK - Keep your dreams alive!
Agaram.LK - Keep your dreams alive!
agaram.lk
agaram.lk

29) ஊடக மாநாடு ஒன்றினை ஒழுங்குபடுத்துதல் பற்றி ஊடகவட்டத்தில் கலந்துரையாடிய போது ஒரு தொகுதி மாணவர்கள் அளித்த பதில்கள் பின்வருமாறு.

ஜெசியா - அனைத்து ஊடகங்களிற்கும் முறையாக அழைப்பிதழ் அனுப்ப வேண்டும்.

சீதா - நேரமுகாமைத்துவத்தினை தெளிவாக கடைப்பிடிக்க வேண்டும்.

மதுரிகா - வருகை தரும் ஊடகவியலாளர்களை பதிந்து வைத்திருக்க வேண்டும்.

நிறோ - வினாக்களை எழுப்புவதற்கு சந்தர்ப்பமளித்தல் கூடாது.

இத்தகைய கூற்றுக்களில் சரியான விடயங்களினை முன்வைப்போர்.

1. ஜெசியா மற்றும் நிறோ
2. ஜெசியா, சீதா மற்றும் நிறோ
3. ஜெசியா, சீதா மற்றும் மதுரிகா
4. சீதா, மதுரிகா மற்றும் நிறோ
5. ஜெசியா, சீதா, மதுரிகா, நிறோ ஆகிய அனைவரும்.

30) உமது பாடசாலையில் தேசிய தமிழ்த்தின அறிவிப்பாளர் போட்டியில் முதலிடம் பெற்ற மாணவியின் புகைப்படம் பாடசாலை வளாகத்தினுள் காட்சிப்படுத்தப்பட்டிருந்தது. இத்தகைய செயற்பாடு.

1. விளம்பரப்படுத்தும் செயற்பாடு.
2. அறிவிப்பாளர் போட்டி நடைபெற்றதை எடுத்தியம்பல்.
3. மாணவர்கள் மத்தியில் பிரசித்தப்படுத்துதல்.
4. பொதுசனத் தொடர்பு வழிமுறையாகும்.
5. புகைப்படம் எடுப்பது இலகு என்பதனால்.

31) பேராசிரியர். பிலிப். கொட்லரினால் முன்வைக்கப்பட்ட நிகழ்வு வகைப்படுத்தலுக்குள் அடங்காத விடயமாக அமைவது.

1. கல்வி மற்றும் தொழில்சார் நிகழ்வுகள்.
2. ஆன்மீக நிகழ்வுகள்.
3. சர்வதேச நிகழ்வுகள்.
4. விளையாட்டு மற்றும் களியாட்ட நிகழ்வுகள்
5. அரசியல் நிகழ்வுகள்.

32) நிகழ்நிலை தரவு தொகுதியொன்றினூடாக வெவ்வேறு தகவல் மூலங்களுக்குள் பிரவேசிக்க முடியுமாயிருப்பதனை குறிப்பிடும் சொல்.

1. எண்ணிமப்படுத்தல். (Digitalization)
2. வலையமைப்பாதல் (Networking)
3. இடைத்தொடர்பு (Interactivity)
4. மீயுரை (Hypertexuality)
5. தானியங்கி (Automation)

33) படைப்பாக்கம் ஒன்றிற்கான கருப்பொருளைப் பெற்றுக் கொள்வதற்கான மூன்று அடிப்படை முறைகளாவன.

1. அறிவாற்றல், மீளுணர்தல், மற்றும் புலனணுர்வு என்பதாகும்.
2. தமது பிறரது மற்றும் ஊடகத்தின் மூலம் கிடைக்கும் அனுபவங்கள் என்பதாகும்.
3. சுயபேச்சு, கற்பனை மற்றும் வழித்தோன்றல்கள் என்பனவாகும்.
4. உணர்தல், புலனுணர்தல், மற்றும் இலக்கிய விமர்சனம் என்பனவாகும்
5. சுயஅனுபவம், கற்பனை, அனுபவம் மற்றும் சமூகமயமாதல் என்பனவாகும்.



Agaram.LK - Keep your dreams alive!
Agaram.LK - Keep your dreams alive!
agaram.lk

Agaram.LK - Keep your dreams alive!

34) பண்பாடு என்பது

A – மனித அனுபவங்கள், பழக்கங்கள் மற்றும் ஆற்றல்களின் இணைவு ஆகும்.

B – வெகுசன ஊடகங்களின் ஊடக கற்பிக்கப்படும் மதிப்பீடுகளின் இணைவு.

C – சமூகத்தினை ஒன்றாக இணைக்கும் பெறுதிகளைக் கொண்டது.

D – மனிதத் தொடர்புகளினால் உருவாகி விருத்தி பெற்றததாகும்.

மேற்கூறிய கூற்றுகக்களில் சரியானவை.

1. A, B, C ஆகியன மட்டும்
2. A, B, D ஆகியன மட்டும்.
3. A, C, D ஆகியன மட்டும்
4. B, A, D ஆகியன மட்டும்.
5. B, C, D ஆகியன மட்டும்.

35) தமது பாடசாலை பற்றிய விவரணப் படமொன்றை ஒளிப்பதிவு செய்யும் போது ஒளிப்படங்களை ஒழுங்கமைக்கும் விதம் பற்றிய மாணவர்களது உரையாடலின் போது கீழ்க்கானும் விடயங்கள் முன்வைக்கப்பட்டன.

A. முழுப் பாடசாலையும் தென்படும் வண்ணம் பாடசாலையின் முற்பக்கத் தோற்றம் ஒளிப்பதிவு செய்யப்பட வேண்டும்.

B. வகுப்பறையில் பாடம் கற்பிக்கும் ஆசிரியரது உருவம் வகுப்பறையின் பின்னனியுடன் காட்டப்படவேண்டும்.

C. அதிபரது முன்வைப்பின் போது அவரது முகத்தின் உணர்வுகள் தெளிவாகக் காட்டப்படவேண்டும்.

D. திரைப்படத்தின் இறுதிக்காட்சியாக பாடசாலையின் சின்னம் காட்டப்பட வேண்டும்.

மேற்காணும் அம்சங்களை ஒளிப்பதிவு செய்யும் போது மிகவும் பொருத்தமான பட ஒழுங்கு முறையாக அமைவது.

1. நீள் எடுப்பு, இடைநிலை எடுப்பு, நெடுந்தொலை எடுப்பு, அண்மைநிலை எடுப்பு
2. நீள் எடுப்பு, அண்மைநிலை எடுப்பு, இடைநிலை எடுப்பு, நெடுந்தொலை எடுப்பு
3. நெடுந்தொலை எடுப்பு, இடைநிலை எடுப்பு, நீள் எடுப்பு, அண்மைநிலை எடுப்பு
4. மிகநெடுந்தொலை எடுப்பு, நீள்எடுப்பு, மிக அண்மைநிலை எடுப்பு, அண்மைநிலைஎடுப்பு
5. நெடுந்தொலை எடுப்பு, நீள் எடுப்பு, அண்மைநிலை எடுப்பு, மிக அண்மைநிலை எடுப்பு

36) கருவிகள், நுகர்வுப்பொருட்கள், பல்வேறு சமூகங்களின் கட்டமைப்பு ரீதியான பண்புகள் மானுட எண்ணக்கருக்கள் நுட்பம் நம்பிக்கைகள் மற்றும் சம்பிரதாயங்கள் ஆகியவற்றின் சேர்க்கையே பண்பாடாகும். என வரைவிலக்கணப்படுத்துபவர்.

1. மலினோவுஸ்கி
2. ரல்ப் லிண்டன்
3. எட்வேட் ரெய்லர்
4. விமல் திசநாயக்கா
5. மார்க்கஸ் டூலியஸ் சீசர்

37) வில்லியம் ஷேக்ஸ்பியர் காலத்தால் அழியாத பல நாடக எழுத்துருக்களை முன்வைத்தவர். அதேபோல லியானாவோடாவின்ஸி புகழ்பெற்ற ஓவியங்களினை வரைந்த பிரபலமானவர் இவர்களின் செயற்பாடுகளோடு தொடர்புடைய பண்பாடு

1. நாட்டர் பண்பாடு
2. பிரசித்தப் பண்பாடு
3. செவ்வியல் பண்பாடு
4. பூகோளப் பண்பாடு
5. வெகுசனப் பண்பாடு

38) ஊடகப் பண்பாடு பற்றி மார்ஷல் மக்லுஹானினால் முன்வைக்கப்பட்ட பணிளுடன் தொடர்பில்லாதது.


1. தகவல் வழங்கல்
2. தொடர்பாடல்
3. புலக்காட்சி
4. சமூகமயமாக்கம்
5. மீளுருவாக்கம்



agaram.lk

www.agaram.lk

- **கீழே தரப்பட்ட வரைபடத்தை 39 முதல் 42 வரையான வினாக்களுக்கு விடையளிக்கப்பயன்படுத்துக.**




39) தொடர்பாடல் மாதிரியொன்றில் உள்ளடக்கப்பட்ட விடயங்களை மேலுள்ள வரைபடம் காட்டுகின்றது. A, B, C மற்றும் D ஆகியவற்றைக் குறித்து நிற்கும் விடயங்கள் முறையே.

1. குளிமுறையாக்குபவர், தகவல், பொருட்கோடல், பெறுநர்.
2. தொடர்பியாளர், கடத்தி, ஊடகம், பெறுநர்.
3. யார், என்ன தகவல், ஊடகம், பெறுநர்
4. குறிமுறையாக்குபவர் என்ன தகவல், யாருக்கு, தாக்கம்
5. தொடர்பியலாளர், என்னதகவல், பெறுநர், தாக்கம்.

40) மேற்படி மாதிரியில் A, B, D மற்றும் E ஆகியவற்றிற்கிடையிலான செயன்முறையின் பிரகாரம்

P - நேர்வழித் தொடர்பாடல் நடைபெறுவதை வெளிப்படுத்துவது

Q - பின்னூட்டம் நடைபெறுவது தெளிவாகின்றது.

R - தாக்கம் பற்றி முக்கியத்துவப்படுத்தப்படுகிறது.

S - ஒரு வழித்தொடர்பாடல் செயன்முறை நடைபெறுகின்றதனை சுட்டுகின்றது.

இவற்றில் உண்மையான கூற்றுக்கள்.

1. P, Q ஆகியன மாத்திரம் 2. Q, R ஆகியன மாத்திரம் 3. R, S ஆகியன மாத்திரம்
4. Q, R, S ஆகியன மாத்திரம் 5. P, R, S ஆகியன மாத்திரம்

41) மேற்குறித்த வரைபடத்தில் உள்ளடங்கியுள்ள விடயங்கள் மிக நெருக்கமாகத் தொடர்பிலுள்ள தொடர்பாடல் மாதிரி எது?

1. ஹரோல். டி. லாஸ்வெல்
2. சாள்ஸ். ஒஸ்கூட் மற்றும் வில்பர்ஷ்ராம்
3. அரிஸ்டோட்டில்
4. குளோட் ஷனொன் மற்றும் வொரன் வீவர்
5. டேவிட். கே. பெர்லோ

42) மேற்குறித்த வரைபடத்தினை நவீன தொடர்பாடல் மாதிரியாக கருதின் அதில் உள்ள எந்தத் தொடர்பாடல் கூறு பாரம்பரியத்தொடர்பாடல் மாதிரியுடன் இணைந்திருக்க முடியும்?

1. A 2. B 3. C 4. D 5. E

43) உமது பாடசாலையின் ஊடககற்கைப்பாட ஆசிரியர் தனது கற்பித்தல் செயற்பாட்டினை சூம் (Zoom) செயலி வாயிலாக உங்களுக்கு மேற்கொண்டிருந்தார் இச்சூழலை அடையாளப்படுத்துவது

1. குறிமுறையாக்கம் ஆகும்.
2. ஊடகற்கை கற்பவர்கள் இணையம் பயன்படுத்துதல் வேண்டும்.
3. அனைவருக்கும் கணனி அறிவு அவசியமானது
4. தகவல் வழங்கல்
5. மெய்நிகர் தொடர்பாடல்.

Agaram.LK - Keep your dreams alive!
Agaram.LK - Keep your dreams alive!



agaram.lk

44) கீழே தரப்படுவன தொடர்பாடல் செயன்முறை பற்றியதும் அதனோடு இணைந்த செயற்பாடுகள் தொடர்பானதுமான கூற்றுக்கள் சிலவாகும்.

A – i சுய எண்ணக்கரு
   ii ஆளுள் தொடர்பாடல்

B - i. ஆழ்பரிவு
   ii. ஆட்களிடைத் தொடர்பாடல்

C – i கலங்கரை விளக்கம்
   ii குழுத்தொடர்பாடல்

D - i எறிவை ஊடகம்
   ii வெகுசனத் தொடர்பாடல்

மேற்படி கூற்றுக்களில் மிகவும் நெருக்கமான தொடர்பினைக் காட்டுவது

1. A, B
2. A, D
3. B, C, D
4. A, B, C
5. A, B, C, D ஆகிய அனைத்தும்

45) பிரபலமான கல்லூரி ஒன்றின் ஊடக வட்டத்தினர் பின்வருமாறு தமது கருத்தியல்களினை முன்வைத்தனர்.

P – பணக்கார வர்க்கத்தினரின் கொள்கைகள் முக்கியத்துவப்படுத்தபடும்.

Q – பணம் படைத்தவர்களது கருவியாக ஊடகம் செயற்படல்.

R – தொலைக்காட்சி அரசியல் மற்றும் வணிகக்குழுவால் இயக்கப்படும்.

S – முதலாளித்துவ சமூகத்தின் கருத்துக்கள் ஊடகங்களில் காணப்படுகிறது.

இக்கூற்றுக்கள் தொடர்புபடுகின்ற ஊடகப்போக்கு.

1. ஊடகப்பொருளாதாரம்
2. ஊடகம் மற்றும் பண்பாடு
3. ஊடகம் மற்றும் தொழினுட்பம்
4. ஊடகத்தகவலின் ஆதிக்கம்
5. ஊடகம் மற்றும் தோற்றமயக்கம்.

46) ஊடகத்தகவல் அல்லது செய்தி ஒன்றின் நம்பகத்தன்மை தீர்மானிக்கப்படுவது.

1. திரிபுபடுத்தல், எளிமைத்தன்மை, வினைத்திறன், மூலமாகும்.
2. எளிமைத்தன்மை, விசேட தன்மை, பக்கச்சார்பு மூலமாகும்.
3. அர்த்தம், பொருத்தப்பாடு, விசேட தன்மை மூலமாகும்.
4. தூண்டல், பக்கச்சார்பு, நடுநிலைமை மூலமாகும்.
5. துல்லியம், நடுநிலை, தெளிவு மூலமாகும்.

47) தொலைக்காட்சி விளம்பரங்கள் மீதான கலந்துரையாடலொன்றில் பாடசாலை ஊடகவட்டத்தில் இடம்பெற்றது.

அகலி - நுகர்வோர் எவ்வாறு பொருட்களை நுகர்கின்றனர் என்பதனை விளம்பரங்கள் மாற்றத்திற்குள்ளாக்கமுடியும்

சரணி - வெகுசன ஊடகங்கள் உயிர்வாழ விளம்பரம் அவசியம்.

கார்த்தி - பொருட்களை நம்பிக்கையுடன் கொள்வனவு செய்ய உதவுகின்றது.

கம்சி - விளம்பரங்களை சரியாக புரிந்து கொள்ள ஒருவர் ஊடகவிளங்கறிவினை கொண்டிருத்தல் வேண்டும்.

மேலே தரப்பட்ட கூற்றுக்களில் இருந்து விளம்பரங்கள் தொடர்பில் சரியான கூற்றுக்களை முன்வைத்தவர்கள்.

1. அகலி மற்றும் சரணி மாத்திரம்
2. அகலி, சரணி மற்றும் கார்த்தி மாத்திரம்
3. சரணி, கார்த்தி மற்றும் கம்சி மாத்திரம்
4. அகலி, சரணி மற்றும் கம்சி மாத்திரம்
5. அகலி, சரணி, கார்த்தி, கம்சி ஆகிய யாவரும்.

Agaram.LK - Keep your dreams alive!
Agaram.LK - Keep your dreams alive!



agaram.lk

Agaram.LK - Keep your dreams alive!

48) தொடர்பாடல் எனும் எண்ணக்கருவின் அடிப்படை அர்த்தமாவது.
1. தகவல் பரிமாற்றம்
2. செய்திகளை எடுத்துச்செல்லல்
3. தனிப்பட்ட இடைத்தொடர்பு
4. ஒருவிடயத்தை இன்னுமொவருக்கு அறியத்தருதல்.
5. தனித்திருக்கும் பகுதியினர் மத்தியில் தொடர்பினை ஏற்படுத்துதல்.

49) பின்வரும் தொடர்புகளை அடிப்படையாக கொண்டு விடையளிக்குக.

A. i. பண்டைய தொடர்பாடல் அடிப்படை வழிமுறைகள்
ii. பறையடித்தல், தீமூட்டுதல்.

B. i. வர்த்தக ஆதிக்கத்துடன் தொடர்புபட்டது.
ii. பிரசித்த பண்பாடு

C. i. எழுத்து மொழிப்பயன்பாடு வெளித்தெரியும் ஊடகம்
ii. தொலைக்காட்சி

D. i. ஊடக நிறுவனத்தின் செயற்பாடுகள் கட்டமைப்பது.
ii. வாயிற்காப்பாளர்கள்.

இவற்றுள் நெருக்கமான தொடர்பினைக் காட்டுவது.

1. A, B 2. A, C 3. A, B, C
4. B, C, D 5. A, B, D

50) “நீங்கள் நினைத்தாலும் தொடர்பாடல் செய்யாமல் இருக்கமுடியாது” இக் கூற்றுடன் பொருந்துவது
1. தொடர்பாடலின் முக்கியத்துவம்
2. ஆளுள் தொடர்பாடலின் அவசியம்
3. ஆட்களிடைத் தொடர்பாடலின் அவசியம்
4. வாய்மொழி சாராத் தொடர்பாடல்
5. வாய்மொழித் தொடர்பாடல்.

Agaram.LK - Keep your dreams alive!

www.agaram.lk

# தொண்டைமானாறு வெளிக்கள நிலையம் நடாத்தும்
## நான்காம் தவணைப் பரீட்சை - 2021
## Conducted by Field Work Centre, Thondaimanaru.
## 4th Term Examination - 2021

FWC

| | | |
|---|---|---|
| தொடர்பாடலும் ஊடகக் கற்கையும் II<br>Communication & Media Studies II | Three Hours<br>Gr -13 (2021) | 29 T II |

மேலதிக நேரம் பத்து நிமிடம்

### பகுதி – II

**அறிவுறுத்தல் :-**

- இந்த வினாத்தாள் பகுதி A, பகுதி B ஆகிய இரண்டு பகுதிகளைக் கொண்டது.
- பகுதி A மூன்று வினாக்களையும் பகுதி B எட்டு வினாக்களையும் கொண்டது.
- பகுதி A பழைய புதிய பாடத்திட்டங்கள் என இரண்டு பகுதிகளுக்கும் பொதுவானது.
- பகுதி B இல் 4, 5, 6, 7 ஆம் வினாக்கள் பழைய பாடத்திட்டத்திற்கும் 8,9,10,11 ஆம் வினாக்கள் புதிய பாடத்திட்டத்திற்கும் அமைவாகத் தயாரிக்கப்பட்டுள்ளன.
- பகுதி A இல் இருந்து ஏதாவது இரண்டு வினாக்களுக்கும் பகுதி B இல் இருந்து உமக்கு உரிய பகுதியிலிருந்து மூன்று வினாக்களுக்குமாக ஐந்து வினாக்களுக்கு மாத்திரம் விடையளிக்குக.
- ஒவ்வொரு வினாவிற்கும் நாற்பது (40 புள்ளிகள் வீதம் வழங்கப்படும்)

### பகுதி A

01. தொடர்பாடலினை இலகுவாகவும் வெற்றிகரமாகவும் முன்னெடுப்பதற்கு அதன் அடிப்படை அம்சங்கள் தொடர்பில் அவதானம் செலுத்தவேண்டும்.
   i) ஆளுள் தொடர்பாடலின் இயல்புகள் **நான்கினைக்** குறிப்பிடுக.
   ii) தொடர்பாடல் கற்கை துறை பற்றி கற்பதனால் மனிதனுள் விருத்தியடையும் **நான்கு** அம்சங்களைப் பெயரிட்டு அவற்றுள் **ஒன்று** பற்றி விபரிக்குக.
   iii) தொடர்பாடலின் பண்புகளை **மூன்று** அம்சங்களின் அடிப்படையில் விளக்குக.
   iv) தொடர்பாடல் செயன்முறையை விளங்கிக் கொள்வதற்கு உதவிக் கொள்ளும் பிரதான கூறுகள் **நான்கினை** உதாரணங்களுடன் விளக்குக?

02. நாட்டார் கலைகள் வாயிலாக படைப்பாக்கத் தொடர்பாடல் மனிதத் தொடர்பாடலில் சிறப்பிடம் பெறுகின்றது.
   i) செய்திப் பத்திரிகை ஊடகதத்தில் படைப்பாக்க மொழி பயன்படும் சந்தர்ப்பங்கள் **நான்கினைப்** பெயரிடுக.
   ii) படைப்பாக்கத் தொடர்பாடல் ஒன்றின் அடிப்படை அம்சங்கள் **நான்கினை** பெயரிட்டு அவற்றுள் **ஒன்று** பற்றி விபரிக்குக.
   iii) படைப்பாக்க ரீதியான தொடர்பாடலில் செல்வாக்குச் செலுத்தும் பாரம்பரியத் தொடர்பாடல் முறைகள் **மூன்றினை** விளக்குக?
   iv) "ஊடக நிகழ்ச்சிகளை பெறுகை செய்யும் இயக்கமுள்ள பெறுநர் விமர்சன ரீதியான பெறுநராக தொழிற்படமுடியும்" அவரிடம் காணப்பட வேண்டிய **நான்கு** திறன்கள் தொடர்பில் ஆராய்க?



agaram.lk
Agaram.LK - Keep your dreams alive!
Agaram.LK - Keep your dreams alive!

03. “தொழில்நுட்ப ரீதயான மாற்றங்கள் தொடர்பாடல் போக்கினை மாற்றியமைத்துள்ளது.

i) ஒஸ்கூட் மற்றும் வில்பர் ஷ்ராம் மாதிரியின் விசேட இயல்புகள் **நான்கினைப்** பெயரிடுக?

ii) வெகுசன ஊடகங்களின் மூலம் ஆற்றப்படுகின்ற பணிகள் **நான்கினைப்** பெயரிட்டு இரண்டு பற்றி சிறு குறிப்பு எழுதுக?

iii) செய்திகளை உருவாக்கவும் விநியோகிக்கவும் பயன்படுத்தக்கூடிய சமூக ஊடகப் பிரயோகங்கள் (APPS) **நான்கினைப்** பெயரிட்டு அவற்றுள் **மூன்றினது** செயற்பாடுகள் பற்றிச் சுருக்கமாக விளக்குக?

iv) புதிய ஊடகங்களில் காணப்படக்கூடிய இயல்புகள் **நான்கினை** உதாரணங்களுடாக விளக்குக?

## பகுதி B

04. i) விளம்பரப்படுத்தல் மூலமாகப் பண்பாட்டில் ஏற்படுத்தும் தாக்கங்கள் **இரண்டினைக்** குறிப்பிடுக.

ii) வெகுசன ஊடகங்கள் வாயிலாகக் கற்றல் செயற்பாடு மேற்கொள்ளப்படுகிறது. கற்றல் கருவியாக வெகுசன ஊடகம் தொழிற்படும் விதங்கள் **இரண்டினையும்** குறிப்பிட்டு விளக்குக.

iii) புதிய ஊடகப் பயன்பாட்டில் காணக்கிடைக்கின்ற மொழி ரீதியான போக்குகள் **நான்கினை** உதாரணங்களுடன் விபரிக்குக.

iv) வெகுசன ஊடகங்களில் மொழிப் பயன்பாட்டுக்கான வரையறைகள் காணக்கிடைக்கின்றன. செய்திப் பத்திரிகை, வானொலி ஆகிய ஊடகங்கள் ஒவ்வொன்றிலும் தாக்கம் செலுத்துகின்ற அத்தகைய வரையறைகள் தலா **மூன்றினைச்** சுருக்கமாக விபரிக்குக.

05. i) வாய்மொழியல்லாத தொடர்பாடலின் பண்புகள் **நான்கினை** விவரிக்குக.

ii) வெகுசன ஊடகச் செய்திகளைப் பகுப்பாய்வு செய்யும் போது கவனத்திற் கொள்ளப்படும் படைப்பாக்கபூர்வமான வாசிப்புடன் தொடர்புடைய **இரண்டு** விடயங்களைக் குறிப்பிட்டு விளக்குக.

iii) படைப்பாக்க அபிவிருத்திச் செயற்றிட்டம் ஒன்றின் இறுதி அறிக்கையில் உள்ளடக்கப் படும் **நான்கு** விடயங்களினை உதாரணங்களுடன் விபரிக்குக.

iv) அபிவிருத்தித் தொடர்பாடல் குறித்து வேறுபட்ட கருத்துரைத்த **நான்கு** மேற்கத்தைய நிபுணர்களினைப் பெயரிட்டு அவர்களில் **இருவர்** அபிவிருத்தித் தொடர்பாடல் பற்றி முன்வைத்த **இரண்டு** விடயங்கள் வீதம் தனித்தனியே விபரிக்குக.

06. i) ஊடக மாநாடு ஒன்றினை ஒழுங்குபடுத்தும் போது கவனத்தில் கொள்ள வேண்டிய விடயங்கள் **நான்கினைக்** குறிப்பிடுக.

ii) பூகோளமய ஊடகத்தில் பண்பாட்டுச் சுற்றோட்டத்தின் சமநிலையற்ற தன்மை காணப்படுவதற்கான விடயங்கள் **இரண்டினைச்** சுருக்கமாக விளக்குக.

iii) பொதுமக்கள் தொடர்பு நடவடிக்கைகளில் புகைப்படவியலைப் பயன்படுத்தக்கூடிய வழிகள் **நான்கினைக்** குறிப்பிட்டு அவற்றுள் **இரண்டினை** விளக்குக.

iv) பூகோள மயமாதலினால் ஊடகத்துறையில் ஏற்பட்டுள்ள புதிய போக்குகளின் **நான்கை** உதாரணங்களுடன் விளக்குக.



Agaram.LK - Keep your dreams alive!
Agaram.LK - Keep your dreams alive!
agaram.lk

07. i) சுயஎண்ணக்கருவினை வரையறை செய்க.

ii) செவிமடுத்தல் செயலொழுங்கின் **நான்கு** கட்டங்களினையும் குறிப்பிட்டு கேட்டல் தேர்ச்சியை விருத்தியாக்கும் படிமுறைகள் **நான்கினைக்** குறிப்பிடுக.

iii) தனியாள் ஒருவருக்கு உளரீதியான அழுத்தங்கள் ஏற்படுவதற்கான சந்தர்ப்பங்கள் **நான்கினைக்** குறிப்பிட்டு அவற்றிலிருந்து மீளுவதற்கான வழிமுறைகள் **நான்கினையும்** குறிப்பிட்டு விளக்கு

iv) ஊடக வன்முறை என்பதில் இருந்து நீர் விளங்குவது யாது என வரையறைத்து வெகுசன ஊடக வன்முறை சித்திரிப்பு தொடர்பில் விமர்சன ரீதியாக ஆராய்க.

❖ **புதிய பாடத்திட்டத்திற்கு உரித்தானது.**

08. i) பெறுநர் ஒருவர் ஊடக விளங்கறிவினை கொண்டிருக்க வேண்டியதன் அவசியம் தொடர்பில் **நான்கு** விடயங்களைப் பெயரிடுக?

ii) பிரசித்த பண்பாட்டின் இயல்புகள் **நான்கினைப்** பெயரிட்டு அவற்றுள் **இரண்டு** பற்றி சுருக்கமாக விபரிக்குக?

iii) வெகுசன ஊடகங்களில் நிகழ்ச்சித் தயாரிப்பின்போது அவ்ஊடகங்களின் இயல்புகள் தொடர்பில் கவனம் செலுத்துதல் அவசியமானது. அந்த வகையில் வானொலி ஊடகத்தின் **மூன்று** இயல்புகள் தொடர்பில் எடுத்துக் காட்டுக்களுடன் விளக்குக?

iv) "பண்பாட்டின் ஊடகங்களின் தாக்கம்" எனும் தலைப்பில் அதன் சாதக பாதக அம்சங்கள் தலா **நான்கின்** அடிப்படையில் செய்திப் பத்திரிகை **ஒன்றுக்கு** 200 சொற்களுக்கு குறையாது கட்டுரை வரைக?

09. i) சுதேச ரீதியாக காணப்பட்ட பொதுசனத்தொடர்புச் சந்தர்ப்பங்கள் **நான்கினை** பெயரிடுக?

ii) பொதுசனத் தொடர்பின் அவசியம் மற்றும் முக்கியத்துவம் தொடர்பில் பிலிப் ஜே.கிச்சன் (Philop. J Kitchen) முன் வைக்கும் **நான்கு** அம்சங்களினை பெயரிட்டு அவற்றுள் **ஒன்று** பற்றி விபரிக்குக?

iii) நிறுவனமொன்றின் பொதுசனத் தொடர்பு விளம்பரப்படுத்தலில் இருந்து எவ்வாறு வேறுபடுகின்றது என்பதனை **மூன்று** அம்சங்களின் அடிப்படையில் ஆராய்க.

iv) பொது மக்கள் தொடர்பு அதிகாரி (PRO) ஒருவரிடம் காணப்படவேண்டிய இயல்புகள் **நான்கினை** குறிப்பிட்டு நிறுவனம் **ஒன்றில்** அவருடைய வகிபாகம் தொடர்பில் ஆராய்க.

10. i) சந்தைப்படுத்தல்துறை பேராசிரியர். பிலிப். கொட்லர் முன்வைக்கும் நிகழ்வு வகைகள் **நான்கினைப்** பெயரிடுக?

ii) ஊடக மாநாடு ஒன்றினை கட்டமைக்கும்போது கவனம் செலுத்தப்பட வேண்டிய **நான்கு** விடயங்களினை குறிப்பிட்டு **இரண்டு** பற்றி விபரிக்குக?

iii) நிகழ்வு முகாமைத்துவ படிமுறைகள் தொடர்பில் கவனம் செலுத்தி பாடசாலை ஊடக தினத்தைக் கொண்டாடுவதை முன்னிட்டு நடைபெறும் விழாவிற்கான திட்டமொன்றை தயாரிக்குக?

iv) உமது பாடசாலையின் வெளியகப் பொது மக்கள் தொடர்பினை கட்டியெழுப்புவதற்குப் பயன்படுத்தக்கூடிய கருவிகள் / முறைகள் **நான்கினை** விளக்குக?



agaram.lk
Agaram.LK - Keep your dreams alive!
Agaram.LK - Keep your dreams alive!

11. i) சமூக ஊடகங்களின் மூலம் சமுதாயத்திற்கு ஏற்படும் சாதகமான தாக்கங்கள் இரண்டினையும் பாதகமான தாக்கங்கள் **இரண்டினையும்** பெயரிடுக.

ii) பாடசாலை ஊடக தினத்தில் நீர் ஒரு மேடைப் பேச்சாளனாக தெரிவுசெய்யப்பட்டுள்ளீர். இத்தருணத்தில் நீர் வினைத்திறனான பேச்சினை முன்வைக்க ஆயத்தமாகவுள்ளீர் இதன்போது கவனம் செலுத்தவேண்டிய விடயங்கள் **நான்கினை** முன்வைத்து அவற்றுள் **இரண்டு** பற்றி விபரிக்குக?

iii) ஊடகத் திறனாய்வில் பயன்படுத்தப்படக்கூடிய கருத்தியல்கள் **மூன்றினை** விளக்குக?

iv) இலங்கையில் தொடர்பாடல் கற்கைநெறியின் ஆரம்பம் தொடர்பில் தகுந்த எடுத்துக் காட்டுக்களுடன் ஆராய்க?

Agaram.LK - Keep your dreams alive!
Agaram.LK - Keep your dreams alive!
agaram.lk